# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக்குழு

அன்பார்ந்த தோழர்களே, வணக்கம்.

இத்துடன் நிலம் கையகப்படுத்தும் சட்டத்திற்கு எதிராக நாளை (மார்ச் 23) நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்திற்கு பயன்படுத்துவதற்கான குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். கட்சியின் மாவட்டக்குழுக்கள் மற்றும் மாநிலக்குழு உறுப்பினர்கள் இதை பயன்படுத்திட கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுடன்,

(உ. வாசுகி)

கன்வீனர் . கிளர்ச்சி பிரச்சாரக்குழு

நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக, முந்தைய காங்கிரஸ் ஆட்சி ஒரு சட்ட மசோதா கொண்டு வந்தது. அப்போது பா.ஜ.க மற்றும் இதர எதிர் கட்சியினர் அதை கடுமையாக எதிர்த்தன. ஆனால், இன்று அதே பா.ஜ.க ஆட்சிக்கு வந்த பின்னர் ஜனநாயகத்திற்கு புறம்பாக, மற்ற கட்சிகளை கலந்தாலோசிக்காமல், ஒரு அவசர சட்டத்தை கொண்டுவந்துள்ளது. அவசர சட்டம் கொண்டு வந்து ஆறு மாதத்திற்குள்ளாக, நாடாளுமன்றத்தின் ஒப்புதலை பெறவேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. காங்கிரஸ் மற்றும் இடதுசாரிகள் கடுமையாக இதை எதிர்க்கின்றனர். அது மட்டுமின்றி, பா.ஜ.கவின் கூட்டணி கட்சிகளான, சிவசேனை, போன்ற கற்சிகளும் இதை எதிர்க்கின்றனர். பிரதமர் மோடியோ, இந்த சட்டம் அமுலுக்கு வந்தால் விவசாயிகள் பயன் பெறுவார் என்று கூசாமல் பொய் சொல்கிறார்.

1894ல் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் கொண்டுவந்த சட்டம் விவாதிக்கப்படாதது மட்டுமின்றி, அது தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்திய அரசும் அந்த சட்டத்தை தவறாக பயன்படுத்தியதன் விளைவாக, இயற்கை வளங்களை நம்பி வாழ்க்கை நடத்தும் கோடானுகோடி குடும்பங்களின் நலன்கள் , உரிமைகள் புறம் தள்ளப்பட்டுவிட்டன. நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக 16 மத்திய சட்டங்களும், ஏராளமான மாநில அளவிலான சட்டங்களும் உள்ளன. இவை அனைத்துமே, மக்களுக்கு சொந்தமான, நிலத்தை, அதிகார வர்க்கம் அபகரிக்க உதவயுள்ளது என்பதில் ஐயமில்லை. அறுபதுகளிலிருந்து, அதிலும் குறிப்பாக, எண்பதுகளிலிருந்து, இந்த சட்டங்களை பயன்படுத்தி, மக்களுக்கு சொந்தமான வளங்கள், நிலங்கள் தனியார் நிறுவனங்கள் மற்றும் கார்பரேஷன்கள் வசம் போய்விட்டன. சிறப்பு பொருளாதார மண்டல சட்டம், சுரங்க சட்டம், தொழில் சட்டம், தேசீய நெடுஞ்சாலை சட்டம் போன்றவற்றில், நிலத்தை ஆட்சியாளர்களும், அதிகார வர்க்கமும் கைப்பற்ற எதுவாக, நிறைய ஷரத்துக்கள் உள்ளன. மக்களின் தொடர் எதிர்ப்புகளை தாண்டி நில அபகரிப்பு நடந்துள்ளது.

பா.ஜ.க கொண்டுவந்துள்ள அவசர சட்டம் கோடிக்கணக்கான விவசாயிகள் தொழிலாளர்களின் வாழ்வாதாரங்களை பறிப்பதாக உள்ளது. நீர், நிலம், காடுகள், கனிம வளங்கள்,அலையாத்திகாடுகள் என, எதிகால சந்ததிஒயினருக்கு தேவைப்படும் அனைத்து வளங்களையும் தனியாருக்கு அழிந்த விலையில் தாரை வார்க்க மோடி அரசு துடிக்கிறது. நிலத்தடி நீர் உட்பட, இந்த வளங்கள் விவசாயம்,மற்றும் அதை சார்ந்த பணிகளுக்கு தேவைப்படுகிறது. உலகில் எந்த நாட்டிலும் தனியார் நலன்களை பாதுகாக்க, அரசு நிலத்தை கட்டாயமாக கையகப்படுத்தும் சட்டம் இருப்பதாக தெரியவில்லை.

* புதிய சட்டம் நல உரிமையாளரின் ஒப்புதலைபெற வேண்டும் என்ற ஷரத்தை நீக்கி விட்டது. பொது நோக்கம் என்ற பெயரில் அப்பட்டமாக நிலஅபகரிப்பு நடக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.இதன் மூலம் தங்கள் வாழ்வாதாரத்திற்கு நிலம் நீர், காடுகளை சார்ந்திருப்போர் வெளிஎற்றபடுவதை சட்டபூர்வமாக ஆக்கிவிடுகிறது. ஆங்கிலேயர் காலத்து சட்டத்தை விட மோசமான ஒன்றாக இது ஆக்கப்பட்டுவிட்டது.

* அரசு-தனியார் கூட்டு திட்டம் என்பதற்கு ஒப்புதல் தர விலக்களிக்கும் பட்டியலில் இணைப்பதன் மூலம், சிறப்பு பொருளாதார மண்டலம் என்ற பெயரில் முறைகேடுகள் செய்யும் வாய்ப்புகளை இது அதிகரித்துள்ளது.

*பொதுவான திட்டங்களுக்கு தேவையான நிதியை தனியாரிடமிருந்து திரட்டவே, இத்தகைய திட்டங்கள் உருவாக்கப்பட்டதாக அரசு சொல்கிறது. கூட்டு திட்டங்கள் தனியாருக்கு தேவையான நிலத்தை பெற உதவி செய்வதற்காகவே செயல்படுகின்றன . பொது தேவை என்ற பெயரில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, பின்னர் நிலம் அரசிடமிருந்து பங்குதாரர்களாக உள்ள நிறுவனங்களுக்கு கை மாறுகிறது. பின் அந்த நிறுவனங்கள் அதை ரியல் எஸ்டேட் மற்றும் வணிக நோக்குடன் நிலங்களை பயன்படுத்தி கொள்ளை லாபம் ஈட்டுகின்றன.

*ஏழைகளுக்கு வீடு வசதி, நெடுஞ்சாலை வசதி, அடிப்படை கட்டமைப்பு வசதி ஆகிய காரணங்களை சொல்லி நிலம் அபகரிக்கப்படுகிறது. ஆனால் உண்மையில், எத்தனை ஏழைகளுக்கு இதன் மூலம் வீடு வசதி கிடைத்துள்ளது? ஏழைகளுக்கு வீடு என்ற பெயரில், கட்டிட நிறுவனங்கள் கொள்ளை லாபம் சம்பாதித்துள்ளன. சேரிகளை மாற்றும் திட்டம் என்ற பெயரில், நல்ல விளை நிலங்கள் பல மாநிலங்களில் அபகரிக்கப்பட்டுள்ளன.

*அடிப்படை கட்டமைப்பு வசதிகளை பெருக்குவது வளர்ச்சிக்கு தேவை என்ற காரணம் சொல்லி நிலஅபகரிப்பு நடக்கிறது.கட்டமைப்பு என்ற தலைப்பின் கீழ், சுற்றுலா முதல் தொழிற்சாலை வரை, நீர் பாசன திட்டம் முதல் மின் உற்பத்தி திட்டம் வரை எதற்காக வேண்டுமானாலும் நிலத்தை கையகப்படுத்தலாம். தொழில் வளர்ச்சி என்ற பெயரில், மும்பை-டெல்லி இணைப்பு திட்டத்திற்கு மட்டுமே, 3,90,000ஹெக்டர் நிலம் அரசு கையகப்படுத்த திட்டமிட்டுள்ளது. இதில் 70% விவசாய நிலம் என்பதுகுறிப்பிடத்தக்கது. இது விவசாயிகள் மீது கடுமையான தாக்குதலை ஏற்படுத்தும். தவிர, அந்த பகுதிகளில் உள்ள ஏழை மக்கள், தெருவோர வாசிகள் பாதிக்கப்படுவர். இந்த திட்டம் தொடர்பாக, ஜப்பானிய வங்கியுடன் ஒப்பந்தம் ஏற்ப்பட்டுள்ளது. ஆனால், சம்பந்தப்பட்ட மக்களுக்கு எதுவும் தெரியாது. எந்த

வெளிப்படை தன்மையும் இல்லாமல் இது போன்ற ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

* இன்று போதிய நீராதாரம் இல்லாமல் ஒருபோக சாகுபடி செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. பல போக சாகுபடி நடைபெறும் இடங்களிலும் ஒரு போகத்திற்கு போக வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். அத்தகைய நிலம் வேளாண் அல்லாத பயன்பாட்டிற்கு வரும் வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே உள்ள அந்த குறைந்தபட்ச உணவு பாதுகாப்பும் அழிந்து விடும் சூழல் ஏற்பட இந்த சட்டம் வகை செய்யும்.

*முந்தைய சட்டத்தில் இருந்த சில ஜனநாயக ஷரத்துக்கள் கூட (கிராம சபைக்கு உள்ள முடிவெடுக்கும் அங்கீகாரம்) இதில் மறுக்கப்படுகிறது.

*16 மத்திய சட்டங்களை இதன் கீழ் கொண்டுவந்து விட்டதாக நிதி அமைச்சர் பெருமைப்படுகிறார். ஆனால், முற்றிலும் ஜனநாயகத்திற்கு விரோதமாக, நிலம் அபகரிக்க இது உதவுகிறது.

*நிலத்திலிருந்துவெளியேற்றப்படுவோரின் கதி என்ன? மிகவும் சொற்பமான தொகையே இழப்பீடாக கிடைக்கிறது என்பது ஏற்கனவே பல மாநிலங்களில் நடத்தியுள்ள ஆய்வுகளிலிருந்து தெரிய வருகிறது. சந்தை மதிப்பை விட கூடுதலாக தரப்படும் என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. முத்திரைத்தாள் தீர்வை மற்றும் விற்பனை பதிவு பத்திரங்களின் அடிப்படையிலேயே அதிகாரிகள் மதிப்பை தீர்மானிக்கிறார்கள். பல நீதிமன்ற தீர்ப்புகள் பற்றிய ஆய்வுகள் சந்தை மதிப்பு என்று இவர்கள் சொல்வது உண்மை சந்தையில் உள்ள நிலவரத்தை விட மிக குறைவானது என்று தெரிவிக்கின்றன.

2013-ம் ஆண்டு ஐக்கிய முற்போக்கு கூட்டணி கொண்டு வந்த நிலம் கையகப்படுத்தும் மசோதாவை எதிர்த்து நாடாளுமன்றத்தில் வாக்களித்த அதிமுக தற்போது அந்த மசோதாவில் இருந்த விவசாயிகளின் ஒப்புதல் வேண்டுமென்ற ஷரத்து மற்றும் சமூக பாதிப்புகள் குறித்த அறிக்கை ஆகியவற்றை நீக்கி பாஜக முன்மொழிந்த மசோதாவை ஆதரித்து மக்களவையில் வாக்களித்துள்ளது. கோடானுகோடி விவசாயிகளை பாதிக்கக்கூடிய நிலம் கையகப்படுத்தும் சட்டப்பிரச்சனையில் அதிமுக தலைமை 2013ல் எதிர்ப்பு, 2015ல் ஆதரவு என இரட்டை நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ளது.

2013ம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கொண்டு வந்த நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் மேம்படுத்துவதற்கான திருத்தங்களை

இடதுசாரிக்கட்சிகள் கொண்டு வந்த போது அதற்கு மாறாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் அங்கமாக இருந்த திமுக அன்றைய சட்டத்தை ஆதரித்தது.

* எனவே, வளர்ச்சி, பொது நோக்கம் என்ற பெயரில், சாதாரண மக்கள் நிலங்களை இழக்கிறார்கள். மோடி அரசின் இந்த அவசர சட்டம் விவசாயிகள், தொழிலாளர்கள், கிராமப்புற, நகர்ப்புற ஏழைகள், எஸ்.சி., எஸ்.டி மக்கள் வாழ்வாதாரங்களை பறித்து, ஒட்டாண்டிகளாக்கி, அவர்களது நிலத்திலிருந்து அவர்களை வெளியேற்றி, அகதிகளாக்கும் சட்டமாகும். இது முழுக்க முழுக்க உள்நாட்டு, வெளிநாட்டு பெருமுதலாளிகள், கார்பரேஷன்களுக்கு இயற்கை வளங்களையும் நிலங்களையும் தாரை வார்க்கும் சட்டம். எதிர் கால சந்ததியினருக்கும் எதிரான சட்டம் . பொய்யான வாதங்களை முன்வைத்து நம்மை முட்டாளாக்கும் இந்த சட்டத்தை அனுமதியோம்.

• • •

ஏழை - எளிய விவசாயிகளின் நிலங்களைப் பறித்து பெரும் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு கொடுக்க முயற்சிக்கும் நரேந்திர மோடி தலைமையிலான பாஜக அரசு கொண்டுவந்துள்ள நிலம் கையகப்படுத்தும் சட்ட மசோதாவை அதிமுக ஆதரித்திருப்பது அப்பட்டமான இரட்டைவேடம் என்று குற்றம்சாட்டியுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மார்ச் 23 அன்று நில உரிமை தினமாக அறிவித்து மாபெரும் கண்டன இயக்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழுக் கூட்டம் கடந்த மார்ச் 14, 15 தேதிகளில் மாமல்லபுரத்தில் மத்தியக்குழு உறுப்பினர் கே. பாலகிருஷ்ணன் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி. ராமகிருஷ்ணன், மத்தியக்குழு உறுப்பினர்கள் உ. வாசுகி, அ.சவுந்தரராசன் எம்எல்ஏ, பி. சம்பத் மற்றும் மாநில செயற்குழு, மாநிலக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான மத்திய அரசு நிலம் கையகப்படுத்தும் அவசரச்சட்டத்தை பிறப்பித்தது. தற்போது பட்ஜெட் கூட்டத்தொடர் துவங்கிய பிறகு மசோதாவை அறிமுகப்படுத்தி மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலம் கையகப்படுத்தும் மசோதா சட்டமானால் விவசாயிகளையும், விவசாயத்தையும், உணவுப் பாதுகாப்பையும், விவசாயம் சார்ந்து வாழும் மக்களையும் கடுமையாக பாதிக்கும்.

நீக்கப்பட்டதும், புகுத்தப்பட்டதும்

நிலம் கையகப்படுத்தப்பட்டால் அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்த பிறகே நிலம் எடுப்பது குறித்து முடிவு செய்ய வேண்டுமென்று முந்தைய சட்டத்திலிருந்த ஷரத்து நீக்கப்பட்டு விட்டது. விவசாயிகளுடைய ஒப்புதலைப் பெறாமலேயே நிலத்தை கையகப்படுத்தலாம் என்ற விவசாயிகளின் வாழ்வாதார உரிமையைப் பறிக்கக்கூடிய பிரிவும் இம்மசோதாவில் உள்ளது. மேலும், எடுத்த நிலத்தை 5 ஆண்டுகள் பயன்படுத்தவில்லையென்றால் திருப்பித்தர வேண்டும் என்ற ஷரத்தும் நீக்கப்பட்டுவிட்டது.

சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காக நாடு முழுவதும் விவசாயிகளுடைய பல லட்சம் ஏக்கர் எடுக்கப்பட்டு கார்ப்பரேட் கம்பெனிகளுக்கும், பன்னாட்டு கம்பெனிகளுக்கும் தொழில் துவங்குவதற்காக அளிக்கப்பட்டது. ஆனால், சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற திட்டமே பெரும்பான்மையாக தோல்வியுற்றது என

தணிக்கைக்குழு அறிக்கை கூறுகிறது. உண்மையில் பாஜக அரசு கொண்டு வந்துள்ள நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் அந்நிய காலனியாதிக்க அரசின் 1894ம் ஆண்டு சட்டத்தின் கொடுமையான அம்சங்கள் மீண்டும் புகுத்தப்பட்டுள்ளன.

அதிமுக இரட்டை வேடம்

விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் செய்யும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கக்கூடிய மத்திய அரசின் நிலம் கையகப்படுத்தும் மசோதாவை எதிர்த்து நாடு முழுவதும் விவசாயிகள் போராடி வருவதைப் புறக்கணித்து மக்களவையில் இம்மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. 2013-ம் ஆண்டு ஐக்கிய முற்போக்கு கூட்டணி கொண்டு வந்த நிலம் கையகப்படுத்தும் மசோதாவை எதிர்த்து நாடாளுமன்றத்தில் வாக்களித்த அதிமுக தற்போது அந்த மசோதாவில் இருந்த விவசாயிகளின் ஒப்புதல் வேண்டுமென்ற ஷரத்து மற்றும் சமூக பாதிப்புகள் குறித்த அறிக்கை ஆகியவற்றை நீக்கி பாஜக முன்மொழிந்த மசோதாவை ஆதரித்து மக்களவையில் வாக்களித்துள்ளது.

கோடானுகோடி விவசாயிகளை பாதிக்கக்கூடிய நிலம் கையகப்படுத்தும் சட்டப்பிரச்சனையில் அதிமுக தலைமை 2013ல் எதிர்ப்பு, 2015ல் ஆதரவு என இரட்டை நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ளது.

நல்ல திருத்தங்களை ஏற்காத திமுக

2013ம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கொண்டு வந்த நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் மேம்படுத்துவதற்கான திருத்தங்களை இடதுசாரிக்கட்சிகள் கொண்டு வந்த போது அதற்கு மாறாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் அங்கமாக இருந்த திமுக அன்றைய சட்டத்தை ஆதரித்தது.

மார்ச் 23 நில உரிமை தினம்

நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை எதிர்த்து நாடு தழுவிய அளவில் மார்ச் 23 -ம் தேதி விவசாயிகள் சங்கங்களும் மற்றும் பல அமைப்புகளும் கண்டன இயக்கம் நடத்துகின்றன. இத்தகைய இயக்கத்தின் ஒருபகுதியாக தமிழகத்தில் கோவை, சேலம், மதுரை, நெல்லை ஆகிய மையங்களில் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை எதிர்த்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு அறைகூவல் விடுக்கிறது. சென்னையில் சிஐடியு

மற்றும் வெகுஜன அமைப்புகளும், தஞ்சையில் விவசாயிகள் அமைப்புகளும் நடத்துகிற கண்டன இயக்கத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு தனது முழு ஆதரவினை தெரிவிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# நிலம் கையகப்படுத்துதல் சட்டம்–நமது பார்வை

அரசின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பு விவசாயமே என கௌடில்யரின் அர்த்தசாஸ்த்திரம் குறிப்பிடுகிறது.

அரசின் முதல் பணி விவசாயம்தான் வெற்று நிலங்களை, செல்வத்தை உற்பத்திசெய்யும் நிலங்களாக மாற்றுவதற்கு தகுதியான வழிமுறைகளை வகுத்தல் அரசின் முதல் பெரும்பணியாக இருந்தது. விவசாயிகளிடம் வரிவசூல் செய்வது மட்டும் அரசின் கடமையல்ல. விவசாயநிலங்களை அதிகரித்து வருவாயைப்பெருக்க வேண்டும். மனுதர்மத்தின்படி, சூத்திரர்களே விவசாயப்பணிகளில் ஈடுப்படுத்தப்பட்டனர், விவசாயிகள் தான் உற்பத்தி செய்யும் பொருளில் 6ல் 1பங்கோ, 8ல் 1பங்கோ, 12ல் 1பங்கோ மண்ணின் தன்மைக்கேற்ப கொடுக்க வேண்டும். போர்போன்ற அவசர காலங்களில் 4ல் 1பங்கு பெரலாம் என மன்னருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. மன்னர்கள் நிலத்தின் மீது வரிவிதிக்கும் உரிமை பெற்றிருந்தனர், விவசாயிகள் தங்களுக்கு உரிமையான நிலத்தை விற்கும் உரிமை பெற்றிருந்தனர். விற்பனைக்கு வந்த நிலத்தை விவசாயிகளின் உறவினர்கள், அண்டை வீட்டுக்காரர்கள், கடன் கொடுப்போர், மற்றவர்கள் என்ற முன்னுரிமையின் அடிப்படையில் தான் வாங்க முடியும் என்ற வழக்கமும் இருந்திருக்கிறது ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தை விற்க விரும்பினால், தனது குடும்ப உறுப்பினர்கள், அண்டைவீட்டுக்காரர்கள் மத்தியில் பொது இடங்களில் வைத்து பிரகடனப்படுத்த வேண்டும். இதில் முன்னுரிமை பெற்றோர் மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை என்றால்தான் மற்றவர்கள் வாங்கலாம்.

மொகலாயர்கள் ஆட்சியிலும், சில இந்து மன்னர்கள் ஆட்சியிலும் நில வருவாயை அதிகரிக்க ஜமீன்தாரர்கள் நியமிக்கப்பட்டனர். தமிழ்நாட்டில் மட்டும் 1500 ஜமீன்தாரர்கள் இருந்தனர். இந்த ஜமீன்தாரர்களும் ஏராளமான நிலங்களை சொந்தமாக்கிக்கொண்டு நிலப்பிரபுக்களாக மாறினர். இது தவிர ரயத்துவாரி நிலப்பிரபுக்கள், இனாம்கிராமங்களின் நிலப்பிரபுக்கள், மடாதிபதிகள் ஆகிய நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தில் நிலங்கள் இருந்தன. இந்த நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான போராட்டம், ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்துடனிணைத்து நடத்தப்பட்டது.

சுதந்திரத்தற்குப்பின் 1948ல் காங்கிரஸ் கட்சி சி.குமரப்பா தலைமையில்விவசாய சீர்திருத்தக்கமிட்டி அமைத்தது, இந்தக்கமிட்டி அரசிற்கு பல ஆலோசனைகளை வழங்கியது. சாகுபடியாளர்களுக்கும், அரசுக்கும் இடையேயுள்ள அனைத்து இடைத்தரகர்களும் நீக்கப்படுவார்கள். விதவைகள், மைனர்கள், ஊனமுற்றவர்கள் தவிர மற்றவர்கள் சாகுபடியில் ஈடுபடவேண்டும். நில உரிமையாளர் விரும்பினால் குத்தகைதாரரிடமிருந்து நிலத்தை மீண்டும் பெறலாம். குத்தகைதாரர்கள் தாங்கள் சாகுபடி செய்யும் நிலத்தை வாங்க விரும்பினால் மண்டல தீர்ப்பாயகம் நிர்ணயிக்கும் விலையைகொடுத்து வாங்கலாம். அரசுப்பண்ணைகள்,கூட்டுப்பண்ணைகள் ஆதரிக்க முடிவுகள் செய்து குழு அரசுக்கு அறிக்கையை கொடுத்தது. இந்தப்பரிந்துரைகளை அரசு ஏற்கவில்லை உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற போராட்டம் தீவிரப்படுத்தப்பட்டது, இதையொட்டிதான் ஜமீந்தாரி முறை ஒழிக்கப்பட்டு ஜமீன் நிலங்களை அவர்களுக்கு 600 கோடி நஷ்டஈட்டை கொடுத்து உபரி நிலங்களாக கையகப்படுத்தியது. நிலச்சீர்திருத்தச்சட்டத்திலிருந்து பால்பண்ணைகள், பழத்தோட்டங்கள்,கல்வி, மருத்துவமனை, அறக்கட்டளைகள், மடங்கள் போன்றவற்றிற்கு,

விலக்கு அளிக்கப்பட்டது. இதை போர்வையாக கொண்டு, நிலப்பிரபுக்கள் தங்களிடம் நிலங்களை தக்கவைத்துக்கொண்டார்கள். நிலச்சீர்திருத்தத்தை நீர்த்துச்செய்யப்போகும் வகைய்யில் பூமிதான இயக்கமென்ற பெயரில் தாமாக முன்வந்து நிலங்களைக் கொடுத்தல் என்ற இயக்கம் துவக்கப்பட்டது. கேரள, மேற்குவங்க இடதுசாரி அரசுகள் தவிர்த்து இதர இடங்களில் விவசாயிகள் போராட்டத்தையொட்டியே நிலங்கள் எடுக்கப்பட்டது. இவை விணியோகிப்பதிலும் இன்றுவரை பிரச்சனைகள் நீடிக்கின்றது.

1894ல் ஆங்கிலேயர் ஆட்சியில் நிலம் கையகப்படுத்துதல் சட்டம் வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்டது. 1894 மார்ச் 1ந் தேதி முதல் இச்சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. பொது நோக்கங்களுக்காகவும், நிறுவனங்களுக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கு இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டது. இச்சட்டம் பொதுப்பயன்பாட்டிற்கு மக்களின் பயன்பாட்டில் உள்ள நிலங்களை கையகப்படுத்தலாம் என கூறியது, கையகப்படுத்தும் நிலங்களுக்கு இழப்பீடு வழங்கவும் வழிவகுத்தது, நிலம் கையகப்படுத்துவதிலிருந்து நஞ்சை நிலங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது, தரிசுநிலங்களே கையகப்படுத்தப்பட்டன. நஷ்ட ஈடு பெறுவதற்கு நில மதிப்பு அடிப்படையாக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதில் காலதாமதங்களும் தாவாக்களும் ஏற்பட்டது. தங்க நாற்கரச்சாலை திட்டம், பாசனத்திட்டங்கள், பல்கலைகழகங்கள் அமைப்பு போன்றவற்றில் இன்னும் நஷ்ட்ட ஈடு வழங்குவதில் பிரச்சனைகள் நீடிக்கிறது

இந்தியாவில் விவசாயமல்லாத பிற தொழில்களுக்கு தேவையான இடம் இந்த விவசாய நிலங்களிலிருந்து தான் பெற வேண்டியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் நர்மதா நீர்தேக்க திட்டம், சிங்கூர் டாடா நானோ கார் தொழிற்சாலை, சிறப்பு பொருளாதார மண்டலங்கள் கங்கா-யமுனா எக்ஸ்பிரஸ் வே போன்றவற்றிற்கு நிலம் கையகப்படுத்தும் போது பிரச்சனைகள் தோன்றியது. இந்த பிரச்சனைகளை எதிர்கொள்ளும் வகையில் காங்கிரஸ் அரசாங்கம் நிலம் கையகப்படுத்துவது குறித்து புதிய மசோதாவை அறிமுகம் செய்தது இந்த மசோதாவின் மீது விவசாய அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள், அரசியல் கட்சிகள், கருத்து கூறவும் வழிவகை செய்யப்பட்டது. பாராளுமன்ற நிலைக்குழுவிற்கும் அனுப்பப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. நீண்ட விவாதங்களில் வந்த கருத்துக்களின் அடிப்படையில் நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்த்துதல் சட்டம் 2013 உருவாக்கப்பட்டது,. இச்சட்டத்தில் இழப்பீடு மட்டுமல்லாமல் சமூகப்பொருளாதார பயன்கள் பெறும் உரிமையும் வழங்கப்பட்டது. கையகப்படுத்தும் நிலம் அரசு திட்டங்களுக்கு என்றால் 70 சதவீத நில உரிமையாளர்களும், தனியார் நிறுவனங்களுக்கு என்றால் 80 சதவீத நில உரிமையாளர்களும் எழுத்துப்பூர்வமான ஒப்புதல் அளித்தால் தான் கையகப்படுத்த முடியும். நிலத்திற்கான இழப்பீடாக நிலத்தின் சந்தை மதிப்பைவிட நகர்ப்புறம் என்றால் 2 மடங்கும், கிராமப்புறம் என்றால் 4 மடங்கும் வழங்கப்படவும் சட்டம் இடமளித்தது. கையகப்படுத்தப்பட்ட நிலத்தை அந்த குறிப்பிட்ட காரியத்திற்காக ஐந்தாண்டுகளுக்குள் பயன்படுத்தவில்லை என்றால் உரிமையாளரிடமே திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்றும் சட்டத்தில் ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டது. நிலம் வழங்குபவரின் குடும்பத்தினருக்கு வேலை வழங்குதல், மாற்று நிலம் வழங்குதல் போன்ற வாய்ப்புகள் வழங்கப்பட்டது. கிராமசபையின் ஒப்புதல் பெறவேண்டுமெனவும் நிர்ணயிக்கப்பட்டது. கையகப்படுத்தும் போது அரசு

அதிகாரிகள் யாராவது தவறிழைத்தால் அத்துறையின் தலைமை அதிகாரி தண்டிக்கப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டது. இப்படிப்பட்ட சட்டம் நாம் உட்பட இடதுசாரி அமைப்புகள் நாடாளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் போராடியதன் காரணமாகவே வந்தது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

நரேந்திர மோடி தாலைமையிலான பா.ஜ.க ஆட்சி வந்த பின்பு பெருமுதலாளித்துவ கார்ப்பரேட் நிறுவனங்களின் மூலதனத்தை ஈர்ப்பதற்கு வசதியாக இச்சட்டத்தை திருத்தி நாடாளுமன்றத்திற்கு தெரியாமல் கொள்ளைப்புற வழியாக அவசரச்சட்டமாக நிறைவேற்றிவிட்டு தற்பொழுது நாடாளுமன்ற ஒப்புதலுக்காக தாக்கல் செய்துள்ளார்கள். இந்த அவசர சட்டத்தில் சமூகப்பாதிப்பு குறித்து ஆய்வு, விசாரணை, வரும் திட்டங்களில் ஏற்படும் ஆபத்து குறித்து மக்கள் கருத்து அறிய தேவையில்லை. உணவுப்பாதுகாப்பிற்கான சிறப்பு ஏற்பாட்டிலிருந்து விலக்கு அளிக்கவும், நில உரிமையாளர்களின் ஒப்புதல் பெறத்தேவையில்லை- கிராமப்பஞ்சாயத்துகளுக்கான அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளது. கையகப்படுத்தும் இந்த நிலத்தை எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் தனியாரே வைத்துக்கொள்ளலாம். நிலத்தை திரும்ப ஒப்படைக்க தேவையில்லை. அரசின் இலவச வீட்டுமனை திட்டத்திற்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதன் மூலம் தனியார் ரியல் எஸ்ட்டேட்காரர்களுக்கு இச்சட்டம் ஆதரவளிக்கிறது. விலக்கிக்கொள்ளாப்பட்ட அனைத்து சரத்துக்களும் கார்ப்பரேட் நலனை கவனத்தில் கொண்டு செய்யப்பட்டது. விவசாயிகள் நலன்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டம் அமலாக்கத்தில் அதிகாரிகள் தவறு செய்தால் அரசு அதிகபட்ச நடவடிக்கை எடுக்க அரசின் அனுமதி பெறவேண்டும் என்றும் திருத்தப்பட்டுள்ளது.

## எங்கள் நிலத்தை எடுக்க விடமாட்டோம்!

எங்கள் நிலத்தைப் பறிக்க ஏன் இத்தனை அவசரம்? இன்னும் நான்காண்டுகள் நீங்கள் தானே அதிகாரத்தில்! அதற்குள் ஏன் இவ்வளவு கெடுபிடி!எல்லோரும் எதிர்த்தாலும் பின் வாங்கப் போவதில்லை எனபிடிவாதமாய் சொல்வது யாருக் காக?சொந்த நாட்டு விவசாயிகளிடம் கொடூரமாக நடந்து கொண்டு, அந்நிய முதலாளிகளிடம் அப்படி என்ன அனுசரணை உங்களுக்கு? வாக்க ளித்தவனுக்கு அளித்த வாக்குறுதியை விட நீங்கள் அந்நிய முதலாளிகளுக்கு அளித்த வாக்குறு தி பெரிதென்று நினைத்து விட்டீர்களா?‘வளர்ச்சி கவர்ந்திழுக்கும் சொல்!

ஆனால், யாருக்கு என்றகேள்விக்கு பதில்தான் இல்லை.‘முதலீடு, ‘வேலைவாய்ப்பு எனும் பசப்பு வார்த்தை. நோக்கியாவும், பாக்ஸ்கானும் கண்முன் காட்சியாய்! வந்தார்கள், சுரண்டினார்கள், கொள் ளை லாபமடித்தார்கள், சென்றார்கள் இழுத்து மூடி விட்டு! நெட்டை மரங்களென நின்றதைத் தவிர என்ன செய்ய முடிந்தது அரசுகளால்? ஆயிர மாயிரம் பேர் இளமையில் வேலையிழந்து வாழ்வே இருண்டு போய் கிடக்கிறார்களே இதுதான் வளர்ச்சியா?

வேலை வழங்கும் லட்சணம் இதுதானா? இனி வரும் முதலாளிகளெல்லாம், சந்திரன், சூரியன் இருக்கும் வரை இங்கேயேதான் தொழில் நடத்து வார்கள். இந்தியர்களுக்குத்தான் வேலை வாய்ப் பளிப்பார்கள், இழுத்து மூடும்பேச்சுக்கே இடமில்லையென்று, மோடிகளாலும், ஜெட்லிகளாலும் உறுதியளிக்க முடியுமா? மீறினால் தொழிற்சாலை களை அரசு எடுக்கும் நிலத்துக்கும், உழைக்கும் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு தருவது எங்க ளின் பொறுப்பு என்று ஆட்சியாளர்களால் அறுதி யிட்டு கூற முடியுமா? ஆயிரம் ஏக்கர் கையகப்ப டுத்தப்படுகிறதென் றால், ஐயாயிரம் குடும்பங்கள் நடுத்தெருவுக்கு தள்ளப்படும்! ஆம்.விவசாயி, விவசாய தொழி லாளி, கால்நடை வளர்ப்பவர், சிறுகடை நடத்துவர், எடுபிடி வேலைகள் செய் பவர் என பட்டியல் நீளும். ஆனால் அமைய விருக்கும் ஒரு தொழிற் சாலையில் எத்தனை பேருக்கு வேலை கொடுப்பார்கள். நிலத்தை மட்டுமே நம்பியிருந்த குடும் பங்களின் வாழ்க்கை ரோட்டோரத்திலா? சரி! நிலத்தை யெல்லாம் கான்கிரீட் காடுகளாக்கி விட்டு எதைத் தின்பது?

உணவு தானியங்கள், பழங்கள், காய்கறிகள் போன்றவை மண்ணில் தானே விளைகிறது. விளையும் நிலத்தைவிற்றுவிட்டு எதற்காக இறக் குமதி செய்ய வேண்டும்? கண்ணை விற்று சித்திரம் வாங்கும் மூடர்களை என்ன செய்யலாம்? நிலத்தை பிடுங்கி முதலாளிகளுக்கு தாரை வார்க் க ஆளாய்பறக்கும் இவர்கள் நதிகளை இணைக் கப் போகிறார்களாம்!. கேழ்வரகில் நெய் வழிகிறது என்றால் கேட்பவனுக்கு மதிவேண்டாமா? ஒரு கிழக்கிந்திய கம்பெனிக்கே நாட்டில் எல்லோரும் அடிமைகளானோம். இப்போது நாலாதிசைகளி லிருந்தும் கம்பெனிகள் கணக்கில்லாமல் வருமாம்! எல்லா நாட்டுக்காரனும் சேர்ந்தால் நம் நாடு இருக்குமா?

மக்கள் மான, மரியாதையோடு வாழமுடியுமா? அல்லது விலங்கினும் கீழான வாழ்க்கையாகி விடுமா? மனிதன் சுதந்திரமாகவும், கௌரவமா கவும் வாழ வேண்டுமானால் வாழ்வாதாரம் முக்கி யம். வாழ்வாதாரமான நிலம் பறிபோனால் அடிமை நிலைதான்! எனவே, விவசாயிகளே! நிலம் நமது சொத்து. நமது மூதாதையர்கள் நமக்கு விட்டுச் சென்றது. அடுத்த தலைமுறைக்கு பாதுகாத்து தரவேண்டியது நமது கடமை. இல்லையென்றால் பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிடும். ஆட்சியாளர் கள், அதிகாரத்திலிருப்பவர்கள் சட்டம் எனும் ஆயுதம் மூலம் நமது நிலத்தை பறிக்க கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுகிறார்கள்.

பிரதமரின் பேச்சும், நாடாளுமன்றத்தில் அர சின் நடவடிக்கையும் அதைத்தான் வெளிப்ப டுத்துகிறது. நாம் என்ன செய்யப்போகிறோம்? உழைத்து உரமேறிய நமது கைகளை கட்டிக் கொண்டு வேடிக்கைப் பார்க்கப் போகிறோமா? அல்லது எங்களின் உயிர் இருக்கும் வரை ஒரு அடி மண்ணைக் கூட எடுக்க அனுமதிக்க மாட் டோம் என்று போர்ப்பிரகடனம் செய்யப் போகி றோமா. தில்லியில் மத்திய அரசின் கொடுங் கோன்மையை எதிர்த்து இடதுசாரி விவசாய சங்கங்கள் உட்பட இருநூறுக்கும் மேற்பட்ட அமைப்புகள், பல்லாயிரக்கணக்கான விவசாயிகள்

ஒன்று கூடி போர்ப்பரணி பாடியுள்ளனர். இந்த ஒற்றுமையும், போர்ப்பரணியும் நாடு முழுவதும் பரவட்டும்.

**எங்கள் நிலம் விற்பனைக்கல்ல - எங்கள் நிலம் அந்நியருக்கல்ல - எங்கள் அனுமதியின்றி எங்கள் நிலத்தில் காலடி வைக்க எவரையும் அனுமதி யோம் அரசையும் அனுமதியோம்– என்றமுழக்கம் எங்கெங்கும் ஒலிக்கட்டும்.**

# மூட்டை பூச்சிக்கு பயந்து வீட்டை கொளுத்திய அதிமுக

முழுக்க நனைந்த பிறகு முக்காடு எதற்கென்று முடிவெடுத்துவிட்டது போல் தெரிகிறது அதிமுக தலைமை. ஆம் நாடாளுமன்ற மக்களவையில் நிலம் கையகப்படுத்துதல் மசோதாவுக்கு ஆளுங் கூட்டணியில் உள்ள சில கட்சிகளே வாக்கெடுப்பிலிருந்து விலகி நின்ற போது அதிமுக வலியச் சென்று வாக்களித்துள்ளது. இது நாடு முழுவதுமுள்ள கோடிக் கணக்கான விவசாய குடும்பங்களுக்கு அதிமுக தலைமை செய்த மாபெரும் துரோகமாகும்.

செல்வி. ஜெயலலிதா அவ்வப்போது தானும் ஒரு விவசாயி தான் என்று சொல்லிக் கொள்வார். கொடநாட்டில் உள்ள தேயிலை தோட்டங்களையும், ஹைதராபாத்தில் உள்ள திராட்சை தோட்டங்களையும் அவர் சம்மதமில்லாமலேயே அரசு கைப்பற்றிக் கொள்ள ஜெயலலிதா சம்மதிக்கிறாறா என்பதை அறிய தமிழக மக்கள் மிகுந்த ஆவலோடு இருக்கிறார்கள். மத்திய அரசு நவீனமான தேயிலை தொழிற்சாலை அமைக்க விரும்பினால் அதற்கு மிகவும் பொருத்தமான இடமாக ஜெயலலிதாவுக்கு சொந்தமான கொடநாடு எஸ்டேட்டும் அதைச் சுற்றியுள்ள தேயிலை தோட்டங்களும் இருக்கும் என்று நான் பரிந்துரை செய்கிறேன்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலங்களை வாங்கிக் குவித்திருப்பவர்களுக்கு ஒரு சில இடங்கள் கைவிட்டு போவதால் பெரிய பாதிப்பொன்றுமில்லை என்று கூட நினைக்கலாம். ஆனால் குடும்பத்தில் மொத்த சொத்தே அரை ஏக்கர், ஒரு ஏக்கர் விவசாய நிலம் தான் என்று இருக்கும் குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வருவதை தவிர வேறு வழி என்ன.

சென்னையிலிருந்து செங்கல்பட்டு செல்லும் வழியில் உள்ள மகேந்திரா சிட்டி என்ற தொழில் நகரம் 11 கிராமங்களை அழித்துத்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. பதினோரு கிராமங்களைச் சேர்ந்த, அந்த நிலங்களை நம்பியிருந்த விவசாயிகளும், விவசாய தொழிலாளர்களும் என்ன கதிக்கு ஆளானார்கள் என்பதைப் பற்றி நிலம் கையகப்படுத்துதல் மசோதாவுக்கு வக்காலத்து வாங்குபவர்கள் விளக்குவார்களா?

தற்போது சில திருத்தங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது. நிலத்தை இழக்கும் குடும்பங்களில் ஒருவருக்கு வேலை என்பது அதில் ஒன்று. நெய்வேலி, பி.எச்.இ.எல் போன்ற பொதுத்துறை நிறுவனங்களுக்கு நிலம் எடுத்த போது வீட்டிற்கொருவருக்கு வேலை என்று தான் சொல்லப்பட்டது. என்ன ஆயிற்று. இன்று வரை அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பொதுத்துறை நிறுவனங்களே இந்த லட்சணத்தில் என்றால், தனியார் முதலாளிகள் வேலை தருவார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம். யார் பொறுப்பேற்றுக் கொள்வது. இது நுனி நாக்கில் தேன் தடவும் தந்திரமே தவிர வேறல்ல!

மற்றொன்று தனியார் மருத்துவமனை, கல்வி நிறுவனங்களுக்கு நிலம் கையகப்படுத்துவதிலிருந்து விதிவிலக்கு! தனியார் என்றால் தானே! அரசு – தனியார் கூட்டு பிபிபிபிபி என்று போட்டுக் கொண்டால் கையகப்படுத்தலாம் தானே? இந்த திருத்தங்களெல்லாம் மக்களை ஏமாற்ற சொல்லும் வார்த்தை ஜாலங்கள். நம்பி ஏமாற வேண்டாம்.

அதனால் தான் எதிர்க்கட்சிகளெல்லாம் ஓரணியில் திரண்டு நின்று எதிர்த்து வாக்களித்திருக்கிறார்கள். பிறகு அதிமுக எந்த அடிப்படையில் ஆதரித்து வாக்களித்தது. இவர்கள் ஒரு மாநிலத்தில் ஆளுங்கட்சி என்பதாலா? அப்படியே வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும் சூரியன் - சந்திரன் இருக்கும் வரை இவர்கள் ஆளுங்கட்சியாகவே இருக்கப் போகிறார்களா?

நாடு எக்கேடு கெட்டாலும், நாட்டிலுள்ள விவசாயிகள் எல்லாம் நாசமாய்ப் போனாலும் அம்மா ஜெயலலிதாவின் நலன்தான் அவர்களுக்கு முக்கியம். சொந்த லாபத்திற்காக மூட்டை பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்திய கதையாகத்தான் அவர்கள் பி.ஜே.பி எதைச் செய்தாலும் ஆதரிப்பது என்று எடுத்திருக்கும் அரசியல் முடிவு.

அதனால் தான் சங்பரிவாரஙகள் மேற்கொண்டிருக்கும் சண்டியர்த்தனமான நடவடிக்கைகளையெல்லாம் தமிழக அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதும், அரசியல் சாசனம் சிவில் சமூகத்துக்கு வழங்கியுள்ள உரிமைகளை நாங்கள் சாம, பேத, தான, தண்டம் என எல்லாவற்றையும் பயன்படுத்தி தடுப்போம் அல்லது பறிப்போம் என்று செயல்படும் சட்டவிரோத நடவடிக்கைகளை மௌனமாக வேடிக்கை பார்ப்பது, அல்லது அவர்களுக்கு ஒத்து ஊதுவது என்ற சரணாகதி நிலையை அதிமுக தலைமை அடைந்துள்ளது. இது தமிழகத்திற்கு பேராபத்து என்பதை அதிமுக தொண்டர்கள் உணர்ந்து கொள்வது அவசியம். நிலம் கையகப்படுத்துதல் மசோதா நாடாளுமன்ற மாநிலங்களவையில் தோற்கடிக்கப்படும் என்ற நம்பிக்கையை எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகள் அளித்திருக்கின்றன. சட்டம் நிறைவேறாமல் இருப்பதற்கான வாய்ப்புகள் தான் அதிகம். அதையும் மீறி சட்டம் நிறைவேறினாலும் அதை செயல்படுத்துவது அவ்வளவு சுலபமல்ல என்பதை ஆட்சியாளர்களுக்கு புரிய வைக்கக்கூடிய விதத்தில் எதிர்ப்பலைகளை பேரலைகளாக மாற்றுவோம். எங்களது மூதாதையர்களின் மூச்சும், ரத்தமும், வியர்வையும் கலந்துள்ள மண்ணை, எங்களுக்கு உணவளிக்கும் நிலத்தை கைப்பற்ற எத்துணை சட்டங்கள் வந்தாலும் அத்தணையையும் தவிடு பொடியாக்கும் வல்லவை விவசாயிகளுக்கு உண்டு என்பதை உணரச் செய்வோம். களத்தை பண்படுத்துவோம்!.